**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**O.S. No. 25 / 2021**

**பி.வா.சா.1 – முருகன்** **11.06.2026**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.15 உயில் ஆவணத்தை என்னிடம் அதனை எழுதிய அழகு என்பவர் கொடுத்தார். மேற்படி உயிலை எழுதி வைத்த அழகு என்பவர் 2020ல் இறந்துவிட்டார். அழகு இறப்பதற்கு முன்பு 2007ல் என்னிடம் அந்த உயிலை கொடுத்தார். 2007ல் அந்த உயிலை என்னிடம் கொடுத்ததாக எனது நிரூபண வாக்குமூலத்திலும் எதிர்வழக்குரையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த தேதி, எந்த மாதம் அந்த உயிலை என்னிடம் கொடுத்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. அந்த உயிலை எனது வீட்டில் வைத்து என்னிடம் கொடுத்தார். மேற்படி உயிலில் கணேசன் என்பவரும் செல்லம் என்பவரும் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள். அந்த உயிலில் இன்னார் என்று நிரூபித்தவர் என்ற இடத்தில் கணேசன், செல்லம், ஜெயராஜ் ஆகியோர் கையொப்பம் செய்துள்ளார்கள். மேற்படி பி.வா.சா.ஆ.15 உயில் எழுதப்பட்டதை நான் நேரில் பார்க்கவில்லை. மேற்படி உயில் எந்த தேதியில் பதிவு செய்யப்பட்டது என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது. இந்த உயிலை 2007ல் என்னிடம் கொடுத்த போது நான் அந்த உயிலை நீதிமன்றம் மூலமாக சான்று பெற்றுத்தருமாறு அவரிடம் கேட்கவில்லை. மேற்படி உயிலை என்னிடம் கொடுத்த போது அதில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் பேச்சியம்மாள் அனுபவத்தில் இருந்தது என்றால் இல்லை என்னுடைய அனுபவத்தில் இருந்தது. பி.வா.சா.ஆ.15 உயிலில் 3வது லக்க சொத்தில் கட்டி கட்டிட வீடு

இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 3வது லக்க சொத்தில் உள்ள வீட்டை சுப்பையா கட்டவில்லை என்றால் சரிதான் அந்த வீட்டை அழகு கட்டினார். சுப்பையா 3வது லக்க சொத்தை காலியிடமாக அழகு என்பவரிடம் கிரையம் வாங்கியதாக சொல்லியிருந்தால் அது தவறு. அழகு பி.வா.சா.ஆ.15 உயிலை என்னிடம் கொடுத்த போது யாரும் உடன் இல்லை. அழகுகோன் என்னுடன் இருந்ததால் அவர் இறந்த பின்பு அவரது பெட்டியில் இருந்து நானாக பி.வா.சா.ஆ.15 உயிலை எடுத்து அழகுகோன் என்னிடம் அந்த உயிலை ஒப்படைத்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சுப்பையா கிரையம் வாங்கிய பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரமான பி.வா.சா.ஆ.10ல் பி.வா.சா.ஆ.15 உயிலை பற்றி சொல்லவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.10 மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.15 உயில் மோசடியானது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.15 உயில் ஆவணத்தை எழுதி வைக்க அழகுகோனுக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்தும் அழகுகோன் எழுதிவைத்த தான செட்டில்மெண்ட் படி பேச்சியம்மாளுக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. பேச்சியம்மாளுக்கு எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் ரத்து செய்யப்பட்டுள்ளதா என்றால் ரத்து செய்யப்படவில்லை. மேற்படி தான செட்டில்மெண்ட்டை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் எடுக்கவில்லை. அதனால் தாவா சொத்துக்களில் 2ம் பிரதிவாதிக்கும்

எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை